1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) 4-10-1971 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் கைத்தறி நெசவாளர்கள் ஊதிய உயர்வுக் கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகளை எழுப்பியதைத் தொடர்ந்து, 12-10-1971 அன்று தறியுடையோர்க்கும் நெசவாளர் களுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன் பாட்டின்படி ஊதியத்தில் ஏற்பட்ட உயர்வு பாவு ஒன்றுக்கு ரூ. 7 ஆகும். ஆனால் 10-12-71 முதல் தறியுடையோர் ஊதியத்தை பாவு ஒன்றுக்கு ரூ. 4 ஆகக் குறைத்தனர். அதன் காரணமாக 3-1-1972-லிருந்து நெசவாளர்கள் உண்ணாநோன்பு இருந்ததோடு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அதன் பலனாக ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி 15-1-1972 முதல் ஊதிய உயர்வு மீண்டும் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. 17-1-1972 முதல் மீண்டும் இயல்பான நிலை திரும்பியது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியாகக் கைத்தறி நெசவாளர்கள் சம்பளம் சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் மாஸ்டர்வீவேர்ஸ் அதை நிராகரித்தார்கள், காரணம் அது சட்டப்படி செல்லாத என்று சொல்கிறார்கள். ஆகவே இப்போது அமைத்திருக்கக்கூடிய சம்பளம் நிர்ணயிக்கும் குழு தன் அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Employees in film studios

*277 Q. Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are proposals under the consideration of the Government to bring the employees in the Film Studios under the purview of the Labour Legislation in this State?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை. ஆனால், சட்டம் இயற்றும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : சினிமாத் தொழில் தற்போது அதிகமாக விரிவடைந்து வருகிறது. ஆதலால் இனியாவது விரைவில் இந்தச் சட்டத்தை அமல் நடத்த மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: 23-7-70 நாளன்று நடைபெற்ற தொழிலாளர் நிலைக்குழுவின் கடைசிக் கூட்டத்தில் விவாதிக்கப்படுவதற்காக இந்த அறிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது. அக்கூட்டத்தில் திரைப்படத்தொழில் பணியாளர்களுக்காக சட்டமியற்றுவது குறித்து முத்தரப்பு குழுவின் அறிக்கையில் அடங்கியிருந்த செயற்குறிப்புகள் ஏற்பளிக்கப் பட்டன. இச்சட்டத்திற்கு இறுதி உரு கொடுக்கப்பட்டு வருவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு சட்டம் இயற்றுவதற்கு முன்பாக நேற்று நிறைவேற்றிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அந்தச் சட்டம் இருக்கிறதே அந்தச் சட்டமாவது பிலிம் ஸ்டுடியோக்களில் பணியாற்றக்கூடியவர்களுக்கு அமலாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தற்போது ஷாப் ஆக்ட் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது பரிசீலிக்கப்படும். இப்போதும் அவர்களுக்கு ஷாப் ஆக்ட்படி தக்க பாதுகாப்பு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன்: சினிமா உலகம் என்பது அது ஒரு தனி உலகமாகக் கருதக்கூடிய அளவிற்கு அது ஒரு பெரிய தொழிலாக இன்றைய தினம் நடந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கும் இந்தச் சட்டங்கள் அவசியமாக வேண்டும் என்பதால் மத்திய அரசிடம் நம் அரசு இது பற்றிக் கடுமையாக வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பலமுறை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக விரைவில் சட்டம் ஒன்று கொண்டுவருவதற்கு மத்திய அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

சட்டமன்ற அச்சுப் பணிகள்

*278 வினா.—**திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சட்டப்பேரவைக்கெனத் தனியாக அச்சகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?